C. S. (Main) Exam : 2012

Serial No. [ ]

E–DTN–M–JMD–21

# TAMIL

## (Compulsory)

*Time Allowed : Three Hours*

*Maximum Marks : 300*

---

### INSTRUCTIONS

*Candidates should attempt **ALL** questions.*
*The number of marks carried by each question is indicated at the end of the question.*
*Answers must be written in **Tamil**, unless otherwise directed.*
*Prescribed word-limit must be followed for Q. No. 3. The precis must be attempted **only** on the special precis sheets provided separately. These precis sheets are to be securely attached to the answer book.*

**Important : Whenever a Question is being attempted, all its parts/sub-parts must be attempted contiguously. This means that before moving on to the next Question to be attempted, candidates must finish attempting all parts/sub-parts of the previous Question attempted. This is to be strictly followed.**

*Pages left blank in the answer-book are to be clearly struck out in ink. Any answers that follow pages left blank may not be given credit.*

---

1. கீழ் வருவனவற்றில் ஏதேனும் ஒன்றினைக் குறித்து ஏறத்தாழ 300 சொற்களில் ஒரு கட்டுரை எழுதுக :- 100

(அ) இந்தியா - வளர்ந்து வரும் வர்த்தக மையம்.

(ஆ) நமது நாட்டின் பெரு நகரங்கள் எந்த அளவுக்குப் பெண்களின் பாதுகாப்புக்கு உகந்தவைகளாக உள்ளன.

(இ வன விலங்குகளை பாதுகாத்தலும் பராமரித்தலும்.

(ஈ) இந்தியாவில் தொழிற்கல்வி.

(உ) திரைப்படம் காட்டும் புனைவு உலகம்.

2. கீழ்க் காணும் பகுதியைக் கவனமாகப் படித்துப் பின் வரும் வினாக்களுக்குத் தெளிவான, சரியான, சுருக்கமான விடைகளை எழுதுக :- 6x10=60

மிக பெரும்பான்மையான வாசகர்கள் ஒரு நூல் தருகிற சிலநேர பொழுதுபோக்குக்காகவோ அல்லது மன ஆறுதலுக்காகவோதான் அதனை வாசிக்கின்றனர். வேறு வகையில் சொல்வதென்றால் பொழுது போக்குதலுக்காக மட்டுமே அவர்கள் வாசிக்கின்றனர். காலம் என்பது மிகப் பெருமதி கொண்ட ஒரு செல்வம் என்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு கருத்து. இச்செல்வத்தை பெரும்பான்மையான வாசகர்கள் தங்களை

அழுத்தும் ஒரு பாரம் என்பதுபோல வீணாகச் செலவு செய்கின்றனர். நூல்களை வாசிப்பது ஒரு வேலையைச் செய்து முடித்துவிடுவது போன்ற தோற்றத் தரும் என்று கண்டு கொண்டு, அவர்கள் வாசிக்கின்றனர். வேறு எதற்காகவும் அவர்கள் நூல்களை வாசிக்கவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஒரு நோக்கத்துடன் அவர்கள் வாசிப்பார்களே யானால், தம் வாசிப்பின் மூலம் சிலவற்றைத் தம்முடன் கொண்டு செல்வார்கள்; ஆனால் அதற்கான எந்த அறிகுறியும் தென்பட வில்லை. அவர்களுடைய வாசிப்பு அவர்கள் மீது மிகச் சிறிய அளவிலான தாக்கத்தையாவது ஏற்படுத்தியிருக்கக் கூடும்; ஆனால் அப்படி தாக்கம் ஏற்படுத்தியிருந்தாலும் அதனைப் பற்றி அறிந்து கொள்ளாதவர்களாகவே அவர்கள் உள்ளனர். நம்மை யறியாமல் சில வற்றால் நாம் தாக்கம் அடையும்போது, அத்தாக்கம் நன்மை பயக்கக் கூடியதாக இருக்கலாம் அல்லது தீமை பயக்கக் கூடியதாகவும் இருக்கலாம், நம்மால் அதனைச் சொல்ல இயலாது. தங்களுடைய வாசிப்பினைக் குறித்து எதுவும் சொல்ல முடியாதவர்களாக அவர்கள் இருக்கிறார்கள் என்பதே அறிவுப்பூர்வமாக தங்களுடன் எதனையும் கொண்டு செல்ல வில்லை என்பதற்குச் சான்றாக உள்ளது.



(Contd.)

**கேள்விகள் :**

(i) பெரும்பான்மையான வாசகர்கள் படிப்பதற்கான காரணங்கள் என ஆசிரியர் எவற்றைச் சொல்கிறார் ?

(ii) காலத்தின் மதிப்பை வாசகர்கள் உணரவில்லை என ஆசிரியர் ஏன் சொல்கிறார் ?

(iii) வாசகர்களின் நேரம் பயனுள்ள வழியில் செலவு செய்யப்படவில்லை என்பதற்கு எது சான்றாக அமைகின்றது ?

(iv) வாசித்து முடித்தபின் வாசகர்கள் என்ன செய்ய வேண்டும் என ஆசிரியர் எதிர்ப் பார்க்கிறார்?

(v) கவனக்குறைவான வாசிப்பை ஏன் ஆசிரியர் குறையுடையதாகப் பார்க்கிறார் ?

(vi) ஆசிரியர் எந்த வகையான வாசகரைகாண விரும்புகிறார் ?

3. கீழ்க் காணும் பகுதியை அதனளவில் மூன்றில் ஒரு பகுதியாக சுருக்கி எழுதுக. குறிப்பிட்ட சொல் அளவு மீறி எழுதப்படும் விடைகளுக்கு மதிப்பெண்கள் குறைக்கப்படும். அதற்கென அளிக்கப் பெறும் தனித்தாளில் சுருக்கப் பகுதி எழுதப்பட்டு, விடைத்தாளுடன் இணைக்கப் படவேண்டும் :- 60

நீர் எளிதாகவும் பூமியின் எல்லா இடத்திலும் காணக்கூடிய ஒரு பொருள், பூமியின் பரப்பளவில்



(Contd.)

70 சதவீதத்தை அது நிறைத்துள்ளது. பூமியின் மொத்த நீரின் அளவு 1.386 பில்லியன் கியூப்க் கிலோ மீட்டர். அதில் 97 சதவீதம் உப்பு நீர், அது பயன்பாட்டுக்கு ஏற்றதல்ல. மீதமுள்ள வெறும் 3 சதவீத நீரே நன்னீராக உள்ளது. இந்த நன்னீரிலும் 68.5 சதவீத நீர் பனிப்பாளங்களாகவும், பனிப்படிவுகளாகவும் நிரந்தரமான உறைபனியாகவும் மாறியிருப்பதால் மனிதர்களின் பயன்பாட்டுக்கு அவை உகந்தவைகளாக இருப்பதில்லை. நன்னீரில் 30 சதவீதம் நிலத்தடி நீரிலிருந்து கிடைக்கிறது, 0.9 சதவீதமான நன்னீர் ஆறுகள், ஓடைகள், ஏரிகள் என்ற வடிவத்தில் நிலப்பரப்பு நீராகக் கிடைக்கிறது. நாம் ஆறுகள், ஓடைகள் மற்றும் ஏரிகளிலிருந்து கிடைக்கும் 70 கியூபிக் கிலோ மீட்டர் நன்னீரையும் மற்றும் நிலத்தடி நீர்த் தேக்கங்களில் இருந்து கிடைக்கும் 70 கியூபிக் கிலோ மீட்டர் நன்னீரையும் நமது தினசரி பயன்பாட்டுக்கு நம்பியிருக்கிறோம். இந்த நீர் அளவு பல ஆயிரம் ஆண்டுகளாக மாறாமல் இருந்து வருகிறது. ஆனால், பெருகிவரும் வீட்டுத்தேவை, வேளாண்மை மற்றும் தொழிற்சாலை வேலைகள் காரணமாக கடந்த சில பத்தாண்டுகளில் நீரின் தேவை மிகவேகமாகப் பெருக்க மடைந்துள்ளது. உலக மக்கள் தொகை 2 பில்லியனாக இருந்த 1940-ம் ஆண்டு காலப் பகுதியில் ஆண்டுக்கான சராசரி நீரின் பயன்பாடு 1,000 கியூபிக் மீட்டராக இருந்தது. 2000 ஆண்டில் மக்கள் தொகை 6 பில்லியனாக உயர்ந்தபோது



(Contd.)

தனிமனிதர்களின் சராசரி நீரின் பயன்பாடு ஆண்டுக்கு 6,000 கியூபிக் மீட்டராக உயர்ந்தது. இந்த உயர்வு நன்னீர் ஆதாரங்களின் மீது கடினமான விளைவுகளை ஏற்படுத்தியது, குறிப்பாக சுற்றுச் சூழல் மாசு அதிகமாக உள்ள பகுதிகளிலும், நீர் ஆதாரம் குறைவாக உள்ள பகுதிகளிலும், நன்னீரில் 70 சதவீதத்தை வேளாண்மை எடுத்துக்கொள்கிறது, அதற்கு அடுத்து தொழிற்துறை (22 சதவீதம்) வருகிறது, பின் வீட்டு உபயோகம் இடம் பெறுகிறது (8 சதவீதம்). உலக மக்கள் தொகை தொடர்ந்து பெருகி வருவதால் நன்னீருக்கான தேவை தொடர்ந்து கூடிக்கொண்டே உள்ளது, இதனால் நீர் ஆதாரம் என்பது போதாமை நிலையை நோக்கிச் சென்று கொண்டேயிருக்கிறது. தற்போதுள்ள நன்னீரின் அளவில் பாதிக்கு மேல் ஒவ்வொரு ஆண்டும் பயன்படுத்தப்படுகிறது. மக்கள் தொகை பெருக்கம் மற்றும் பெருகிவிட்ட தேவையின் காரணமாக இந்தப் பயன்பாட்டு அளவு 2050 ஆம் ஆண்டு வாக்கில் 74 சதவீதமாக உயர்ந்து விடும். அமெரிக்கர்கள் சராசரியாக பயன்படுத்தும் நீரின் அளவுக்கு இணையாக உலகில் உள்ள ஒவ்வொருவரும் நீரைப் பயன்படுத்து வார்களேயானால், நீரில் பயன்பாட்டு அளவு 90 சதவீதத்தைத் தாண்டிவிடக்கூடும், அமெரிக்கர் ஒருவரின் நீர்ப் பயன்பாடு மிக மிக அதிகமானது.

நீர் விநியோகத்தில் மிகவும் கவனத்திற்குரிய சிக்கல், அது உலகம் முழுவதும் சமச்சீர் அளவில்



(Contd.)

இல்லை என்பதுதான். நீர் வளம் பெருகிய நாடுகள் நீர் வறுமையுற்ற நாடுகள் என்பவை இருக்கின்றன, இவற்றின் ஆண்டுக்கான சராசரி தனி மனித நீர்ப் பயன்பாடு மிக அதிக அளவாக 10,767 மில்லியன் கியூபிக் மீட்டர் (கிரின்லாந்து) தொடங்கி மிகக் குறைவான அளவான 10 கியூபிக் மீட்டர் (குவைத்) அளவு வரை உள்ளன. இந்தியாவில் சராசரி தனிமனித நீர்ப்பயன்பாடு 1951 இல் 5,177 கியூபிக் மீட்டராக இருந்தது. இந்த அளவு 2001 இல் 1,820 கியூபிக் மீட்டராகக் குறைந்ததன் மூலம் இந்தியாவை நீர் வறுமையுற்ற நாடு என்ற இடத்திற்கு நகர்த்தியிருக்கிறது. 2025 ஆம் ஆண்டு அளவில் இந்த அளவு 1340 கியூபிக் மீட்டர் என்ற நிலைக்குக் குறைந்துவிடும் என்று கணக்கிடப் பட்டுள்ளது.

உலகின் பல பெரு நதிகளும் அவற்றின் கிளை நதிகளும் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளின் வழியாக பாய்கின்றன. உதாரணமாக கங்கை நதியும் அதன் கிளை நதிகளும் நேபாளம், இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளூடாகப் பாய்கிறது, சிந்து நதியும் அதன் கிளை நதிகளும் இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளூடாகப் பாய்கின்றன. ஜெர்மன் நாட்டில் தோன்றும் டானுப் நதி ஆஸ்திரியா, சுலோவாகியா, ஹங்கேரி, குரோஷியா, செர்பியா, ரொமானியா, பல்கேரியா, மோல்டாவியா மற்றும் உக்ரெய்ன் நாடுகள் வழியாகப் பாய்கின்றது. ஜாம்பிசே நதி ஜாம்பியா, அங்கோலா, நமிபியா, போத்ஸ்வானா, ஸிம்பாப்வே மற்றும் மொஸாம்பிக் நாடுகள்



(Contd.)

வழியாகப் பாய்கிறது. எகிப்து நாட்டின் வாழ்வாதாரமாக உள்ள நைல் நதி சூடான், எத்யோப்பியா, கென்யா, ருவாண்டா, புருன்டி, உகாண்டா, தான்சானியா, ஜெயர் என்ற எட்டு நாடுகளில் தோன்றி ஒன்றிணைகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளின் வழியாக ஒரு ஆறு பாய்கின்ற பொழுது நதிக்கரை நாடுகளின் அரசுகளுக்கிடையில் நீரைப் பகிர்ந்து கொள்வதில் பூசல் ஏற்படுகிறது. இந்த வகையான நதிநீர்ப் பூசல் தெற்கு மற்றும் மத்திய ஆசியா, மத்திய அய்ரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உருவாவது கி.மு 3000 ஆண்டுக்கு முன்பிருந்தே நிகழ்ந்து வருகிறது. வேளாண்மை, தொழிற்துறை மற்றும் வீட்டு உபயோகத்திற்கான தேவை பெருகி வருவதால் நதிநீர்ப் பங்கீட்டுச் சிக்கல்கள் கடுமையான வடிவத்தைப் பெற்று வருகின்றன, இது சில நேரங்களில் வன்முறையான மோதலுக்குக் கூட வழி வகுத்துவிடுகிறது. ஒரே நாட்டிற்குள் பாயும் ஒரு நதியின் நீரைப் பகிர்ந்து கொள்வதில் இருவேறு பகுதிகளிடையே மற்றும் வட்டாரங்களுக்கிடையில் ஏற்படும் சிக்கல்களும் கூட கவனமாகக் கையாளப்படவேண்டியவையாக உள்ளன. சாக்கியர்கள் மற்றும் கோடியர் களுக்கிடையில் ரோகிணி நதியின் நீரைப் பங்கிட்டுக்கொள்வதில் ஏற்பட்ட போரில் கௌதம் புத்தர் (கி.மு. 563-483) தலையிடவேண்டிய நிலை ஏற்பட்டது.



(Contd.)

4. பின் வரும் பகுதியைத் **தமிழில்** மொழி பெயர்த்து எழுதுக :- 20

I remember my father starting his day at 4 a.m. by reading the namaz before dawn. After the namaz, he used to walk down to a small coconut grove we owned, about 4 miles from our home. He would return, with about a dozen coconuts tied together thrown over his shoulder, and only then would he have his breakfast. This remained his routine even when he was in his late sixties.

I have throughout my life tried to emulate my father in my own world of science and technology. I have endeavoured to understand the fundamental truths revealed to me by my father, and feel convinced that there exists a divine power that can lift one up from confusion, misery, melancholy and failure, and guide one to one's true place. And once an individual severs his emotional and physical bondage, he is on the road to freedom, happiness and peace of mind.

5. பின் வரும் பகுதியை **ஆங்கலத்தில்** மொழி பெயர்த்து எழுதுக :- 20

கிறிஸ்து சகாப்தம் தொடங்குவதற்கு முன்னான மிகப் பழங்காலம் தொட்டே மருத்துவமனைகள் இருந்து வருகின்றன, இதற்கான தொடக்கம் கிரேக்கம், எகிப்து மற்றும் இந்தியாவில் நிகழ்ந்துள்ளது. உலகின் பெரும்பாண்மையான



(Contd.)

நாடுகளில் மிகச் சிறந்த மருத்துவமனைகள் பல உள்ளன, இவை அனைத்து வகையான நோய்களுக்கும் சிகிச்சை யளிக்கும் வசதி கொண்டவையாக உள்ளன. பயிற்சிகள் மற்றும் ஆராய்ச்சிக்கான வசதிகளைக் கொண்டுள்ளன, ஏராளமான சிறிய மருத்துவ நிறுவனங்கள் குறிப்பிட்ட சில நோய்களுக்கு மட்டும் சிறப்புச் சிகிச்சை அளிக்கக் கூடியவையாக உள்ளன, அல்லது பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவம் அளிக்கின்றன. அய்க்கிய அரசு (U.K) மற்றும் அய்க்கிய அமெரிக்க நாடுகளில் மருத்துவமனைகள் அரசாங்கத்தால் அல்லது நகராட்சி மன்றங்களால் நிதியுதவி அளிக்கப் படுகின்றவையாகவோ நிர்வகிக்கப் படுகின்றவை யாகவோ இருப்பது வழக்கத்தில் உள்ளது. இந்த முறையானது பணிகள் தடைபடாமல் காக்கிறது, நிதிப்பற்றாக் குறையால் முடங்காமல் பார்த்துக் கொள்கிறது, அது மட்டுமின்றி முழுச் சமுகத்திற்கும் நலம் புரிவதற்கு ஏற்ற முறைப்படுத்தப்பட்ட செயல் முறையை உருவாக்கித் தருகிறது, அத்துடன் மனித ஆற்றலை நெறிப்படுத்துகிறது. ஆனால், தீவிரமான விமர்சனம் இல்லாததாலும் வீணான செலவீனத்தினாலும் மந்தமான, இயந்திர கதியிலான, ஆன்மா அற்ற வழக்கமான செயல்முறைத்தன்மை கொண்ட, செயல் வேகம் குறைக்கக் கூடிய சமூக அமைப்பை உருவாக்கும் நிலையையும் இந்த முறை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது.



(Contd.)

6. (a) கீழ்க் காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக :- 5

(i) நுண்ணறிவு

(ii) ஏற்றத்தாழ்வு

(iii) வெளியேற்றம்

(iv) கால மாற்றம்

(v) நல்லியல்பு.

(b) கீழ்க் காணும் சொற்களைப் பிரித்து எழுதுக :- 5

(i) நன்னடத்தை

(ii) அறிவாற்றல்

(iii) கருங்குருவி

(iv) பொற்றாமரை

(v) கடுஞ்சொல்.

(c) கீழ்க் காணும் சொற்களுக்கு எதிர்ச் சொற்கள் எழுதுக :- 5

(i) எளியோர்

(ii) இன்சொல்

(iii) நற்காலம்

(iv) ஈதல்

(v) வீழ்ச்சி.

 (Contd.)

(d) கீழ்க் காணும் சொற்களின் பிழைநீக்கி எழுதுக :- 5

(i) பொண்ணெழுத்து

(ii) மண்வலம்

(iii) ஏறிக்கறை

(iv) கோயில் குலம்

(v) அரநெறி.

(e) கீழ்க் காணும் சொற்களின் பொருள் வேறுபாட்டினை ஏற்ற சொற்றொடர்களில் அமைத்துக் காட்டுக :- 10

(i) கலை - களை

(ii) இரை - இறை

(iii) களம் - கலம்

(iv) திரி - திறி

(v) குரல் - குறல்.

(f) கீழ்க் காண்பவற்றுள் ஏதேனும் ஒரு தொடரை விளக்கி **ஐந்து** சொற்றொடர்களில் ஒரு பத்தி எழுதுக :- 10

(i) மண்ணுரிமை

(ii) தொழிற் கல்வி.